**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.. 152/2022 தேதி- 14.11.2025

(P.W.1) .வாமதேவன்நாயர்

**<u>4 மற்றும் 5 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

. வழக்கு பட்டிகை சொத்து எனக்கு வாக்கால் பாகத்தின்மூலம் கிடைத்ததற்காக ஆவணங்கள் ஏதாவது நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4 ஆம் பிரதிவாதியிடம் 3 ஆம் பிரதிவாதி வித்யா என்பவர் ஆவணங்களுடன் மனு கொடுத்து அந்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில்தான் வீட்டுவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் அனைத்தும் போலியானது. இந்த வழக்கில் 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளுக்கு பிரிவு 80 சிபிசி நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என்கிற விபரம் தெரியுமா என்றால் அனுப்பப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மேற்படி நோட்டீஸ் உள்ளதா என்றால் இல்லை.

4 மற்றும் 5 பிரதிவாதிகளை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்க எந்தவித அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 4 ஆம் பிரதிவாதி உரிய ஆவணங்களின் அடிப்படையில்தான் வீட்டுவரி பெயர் மாற்றம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 4 ஆம் பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை சொத்திலுள்ள கட்டிடத்தை பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று எந்த ஆட்சேபணை மனுவும் நான் கொடுக்கவில்லை என்றால் வழக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன்.

இந்த வழக்கில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரிவு 80 சிபிசி நோட்டீஸ் அனுப்பாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு 4 மற்றும் 5

பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.